1979 மார்ச் 7]

(இ) அரசின் நிதி நிலைமைகளுக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்கும் வருகை தந்திருக்கிறார்கள். நெசவாளர்கள் மிகவும் அதிகமாக வாழக் கூடிய அந்தப் பகுதியிலே உருக்கு நோயால் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அந்த இடத்திலே, ஏறத்தாழ, பேரறிஞர் பெருந்தகை அண்ணா காலத்திலேயிருந்து, அவர்கள் விரும்பிய அந்தப் பகுதியிலே ஒரு மருத்துவ நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை இருக்கிற காரணத்தாலே, அங்கே அத்திட்டத்தை விரைவிலே செயலாக்க இந்த அரசு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளிலே காச வியாதி அதிகமாக பீடிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த காரணத்தால்தான் இன்றைய தமிழக அரசும் மற்றவர்களும் அவர்களுக்கான அந்த பிரச்னையிலேயிருந்து விடுதலை பெறவழி வகைகளை வகுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் ஒரு மருத்துவ மனை கட்ட வேண்டுமென்று அதற்கு ரூபாய் 65,000 ஒதுக்கினார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட காச நோயையெல்லாம் நீக்குவதற்கு ரூபாய் 65,000 போதுமானதாக இல்லையென்ற காரணத்தினால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதை ஆய்ந்து தேவையான அளவுக்குக் கட்டிடங்கள் கட்டியாக வேண்டுமென்ற முறையில், அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

கோவை மாவட்ட கைத்தறி நெசவாளர்களது கோரிக்கை.

* வினா எண். 276—திரு. கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா ?

(அ) கோவை மாவட்ட கைத்தறி நெசவாளர் சங்கத்தின் சார்பில் தொழில் கோர்ட்டு தீர்ப்பை அமுலாக்கக் கோரி மறியல் போராட்டம் நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?

(இ) அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) ஆம். 26-5-1978 அன்று நெசவாளர்கள் மறியல் போராட்டம் செய்தனர்.

(ஆ) 185 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால், அன்றிரவே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மீண்டும் 1-7-1978 முதல் காலவரையின்றி உண்ணாவிரதம் மேற்கொண்ட மூன்று நெசவாளர்கள் 3-7-1978 அன்று கைது செய்யப்பட்டனர்.

(இ) நெசவாளர்களின் கோரிக்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை மீது சுமுகமான உடன்பாடு ஏற்படுத்த அரசு தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக கைத்தறி உற்பத்தி யாளர்களுக்கும், நெசவாளர்களுக்கும் இடையில் 27-7-1978 அன்று சுமுகமான உடன்பாடு ஏற்பட்டு, 1-8-1978 முதல் போராட்டம் கைவிடப்பட்டது. கைது செய்யப்பட்ட 3 நெச வாளர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கும் கைவிடப்பட்டு, அவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

[முற்பகல் 10-00.]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர் களே, கைது செய்யப்பட்ட நெசவாளர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தொழில் கோர்ட் தீர்ப்பினுடைய அடிப் படையில் உற்பத்தியாளர்கள் முறையாக அமுல் நடத்துகிறார் களா? இன்னும் அமுல் நடத்தாமல் இருக்கக்கூடிய மையங்கள் எத்தனை? எந்தெந்த இடங்களில் அமுல் நடத்தி வரு கின்றன என்பதை தெரிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, தொழில் கோர்ட்டினுடைய தீர்ப்பை எதிர்த்து ஒரு சில உற்பத்தியாளர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தொழில் நீதி மன்றத் தீர்ப்பை ''நிறுத்தி வைக்கும் ஆணை'' பெறப்பட்டது. இதன்மீது சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆணை பெறப்பட்டால் தான் தொழில் கோர்ட்டினுடைய தீர்ப்பு அமுலாக்கப்படும். இந்த தீர்ப்பு கோவை, திருப்பூர், சிறுமுகைப்புதூர் போன்ற மையங் களில் உற்பத்தியாளர்களால் அமுல் நடத்தப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:—தலைவர் அவர்களே, நெச வாளர்களின் கோரிக்கை சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர் களை விடுவிக்கவேண்டும் என்றும், தொழில் கோர்ட்டினுடைய தீர்ப்பை உடனடியாக அமுல் படுத்த வேண்டும் என்றும்,

1979 மார்ச் 7] [திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா]

நெசவாளர்களின் ஒரு சாரார் சென்னை கோர்ட் அருகில் அரசியல் சட்டத்தை எரிப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுவதாக தெரிகிறது. இது சம்பந்தமாக அவர்களை சந்தித்து, நெசவாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் இடையில் சுமூகமாக பிரச்னையை தீர்க்க மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, மூல கேள்வி கோவை மாவட்ட கைத்தறி நெசவாளர் சங்கத்தின் சார்பில் தொழில் கோர்ட்டு தீர்ப்பை அமுலாக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது சம்பந்தமாகத்தான், அதனால் இதை தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் கொடுக்கிறேன்.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மே மாதம், அக்டோபர் மாதங்களில் நடந்த நெசவாளர் போராட்டங்களில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அவர்கள் மீது தொடர்ந்து வழக்கு நடந்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. மூதறிஞர் இராஜாஜி விழாவிலே முதலமைச்சர் அவர்கள் கைதானவர்கள் எல்லோரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். ஆனால் அவர்கள் மீதெல்லாம் வழக்குகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதனால் அவ்வழக்குகளை வாபஸ் வாங்க அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, அமைதியான முறையிலே போராட்டம் நடத்தியவர்களைத் தான் முதலிலே அரசு விடுதலை செய்திருக்கிறார்கள். வன்முறையிலே இறங்கி போராட்டம் நடத்தியவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையம்.

*வினா எண் 277—திரு. ந. தனசேகரன்:—மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூத்துக்குடியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைத்ததில் முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார்கள் ஏதேனும் அரசிற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?